2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

அரசு கலைக் கல்லூரி

***5695—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டியிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசு கலைக் கல்லூரியாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் தற்போது 892 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். ஆண்டிப்பட்டியிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் சுற்றுச் சுவர் இல்லாமல் ** அங்கு சுமார் 1,100 மீட்டர் சுற்றுச் சுவர் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு. . . (குறுக்கீடு)*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள். ஆதாரம் இல்லாததையெல்லாம் பேச வேண்டாம். அவர் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. அ. பாஸ்கர்: அரசு கலைக் கல்லூரியில் 1,100 மீட்டர் சுற்றுச் சுவர் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தருமபுரி மாவட்டத்தில் கல்வியியல் கல்லூரி ஒன்றை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி எல்லைக்குட்பட்டதாகும். மேற்படி கல்லூரிக்கு 1,100 மீட்டர் சுற்றுச் சுவர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்கு பெரிய அளவில் செலவாகாது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி இருக்கிறது. அந்த நிதியிலிருந்து அவரே சுற்றுச் சுவர் கட்டிக்கொடுத்து, அதைப் பாதுகாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மூலக்கேள்வி ஏற்கெனவே இருக்கக்கூடிய உறுப்புக் கல்லூரியை Constituent College ஆக அதாவது, மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசு கல்லூரியாக மாற்ற முடியுமா என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி என்பது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. ஆகவே, அவர் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

டாக்டர் ச. துரையப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி பொன்னியின் செல்வி அம்மா அவர்களே, அந்தக் காலத்தில் காஞ்சி நகரம் கல்வியில் சிறந்த நகரமாக விளங்கியது. அதுபோன்று

2013 ஏப்ரல் 16]

என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதி கல்வியில் சிறந்த நகரமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. எல்.கே.ஜி. முதல் உயர்நிலைப் பள்ளி வரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்விக் கூடங்கள் இருக்கின்றன. ஒரு அரசு கலைக் கல்லூரிகூட எனது தொகுதியில் இல்லை. எனது தொகுதி மாணவர்கள் மேற்படிப்புக்காக திருநெல்வேலி, மதுரை, சென்னை போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பொன்னியின் செல்வி அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலித்து, எனது தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லையென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. பத்து அரசு உதவி பெறும் கல்லூரிகள், இருக்கின்றன. சுயநிதி கல்லூரியைப் பொறுத்தவரை அந்த மாவட்டத்தில் 10 கல்லூரிகள் இருக்கின்றன. அரசு உறுப்புக் கல்லூரி, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன. அந்த மாவட்டத்தில் மொத்தம் 24 கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தெந்த மாவட்டத்தில் இதுபோன்று கல்லூரிகள் இல்லையோ, மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதுவரையில் 36 கலைக் கல்லூரிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார். தொகுதி என்ற அடிப்படையில் இல்லாமல், தொலைதூரப் பகுதி, ஏழையெளியவர்கள் இருக்கக்கூடிய பகுதி, கல்வி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய பகுதி, இதுபோன்ற பகுதிகளைத் தேர்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் கல்லூரிகள்

[2013 ஏப்ரல் 16

அவசியம் வேண்டுமோ அந்தந்தப் பகுதிகளில் கல்லூரிகள் திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் நிதியின்மை காரணத்தினால் அவர்களுடைய வளர்ச்சிப் பணிகள், மற்றப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. ஏற்கெனவே சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய 'மனோ' கல்லூரிக்கும் கட்டடம் கட்டுவதற்கான இடம் கையகப்படுத்துவதற்குக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, உறுப்புக் கல்லூரிகளுக்கு அரசு நிதி ஒதுக்கவும், சங்கரன்கோவிலிலுள்ள, மனோ கல்லூரிக்கு இடத்தைக் கையகப்படுத்தி கட்டடத்தைக் கட்டித் தருவதற்கும் முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளை இரண்டு, மூன்று வகைகளில் நாம் துவக்கி வருகிறோம். அரசு மூலமாக நாம் கல்லூரியைத் துவக்கி வருகிறோம். பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக நாம் துவக்கி வருகிறோம். சில நேரங்களில் தனியாரும் கல்லூரிகளைத் துவக்குவதற்கு அரசினால் அனுமதி அளிக்கப்படுகிறது. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி துவக்குகின்ற காலத்தில் அரசே முன்வந்து அந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தி பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளைத் திறந்து வருகிறது. சில நேரங்களில் அந்தப் பல்கலைக்கழகத்தின் எல்லைக்குட்பட்ட இடங்களில் எங்கேயாவது மாணவர்களுடைய*

நலன் கருதி கல்லூரியைத் துவக்க வேண்டுமென்று கருதினால், அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய சின்டிகேட்டே சில நேரங்களில் கல்லூரியைத் துவக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய சிண்டிகேட் முடிவு செய்து, கிராமப் பகுதிகளிலே, அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய நிதி, பொருளாதாரத்தை வைத்து, ஆங்காங்கே மனோ கல்லூரி போன்று 6 கல்லூரிகள் துவக்கப்பட்டன. அதனுடைய அடிப்படையிலேதான், மனோ கல்லூரியும் துவக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள்கூட, திருநெல்வேலியில் இருக்கக்கூடிய மனோ கல்லூரிக்குக் கட்டடம் இல்லை என்று ஒரு கோரிக்கையை வைத்திருந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் என்னை அழைத்து, "நீங்கள் நேரில் சென்று அங்கே ஆய்வு செய்து, அதற்கு இடம் தேர்வு செய்ய வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்கள். உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று, பார்வையிட்டு, அந்த இடம் கோயிலுக்குச் சொந்தமானது; கோயிலுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இடத்தின் பக்கத்திலே இரயில்வே நிலையம் இருக்கிறது. அங்கே, பொதுமக்களில் சிலர் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள்; சிலர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். ஆகவே, அது அரசினுடைய பரிசிலனையில் உள்ளது. எனவே, அதுகுறித்து பரிசீலித்து முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்பு, சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைப் பொறுத்தவரையில், ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து வரக்கூடிய 5 ஆண்டுகளுக்கு அரசு நிதியுதவி வழங்குகிறது. அதற்குப்பிறகு, அந்தக் கல்லூரி என்பது பல்கலைக்கழகத்தினுடைய ஓர் உறுப்பாக இருப்பதால், அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய நிதியில் இருந்தும், மாநில நிதிக் குழுவின் மூலமாகவும், பல்கலைக்கழகத்தினுடைய மானிய நிதிக் குழுவின் மூலமாகவும் அந்தக் கல்லூரியை நடத்துவதற்கு வழிவகை செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.